## தமிழ்நாடு உலக அளவில் தலைசிறந்து விளங்குகிறது!

# முதலமைச்சர் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,அக்.13–

**தமிழ்நாடு விளையாட்டுத்துறையில் உலக அளவில் சிறந்து விளங்குகிறது என்றும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார் என்றும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த வீரர்–வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டிலிருந்து 48 வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றனர். அவர்களில் 20 பேர் 17 விளையாட்டுப் போட்டிகளில் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்றுள்ளார்கள். வெற்றிபெற்ற உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்.

இதற்கு முன்பு இந்தோனேசியாவில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 8 வெள்ளி, 14 வெண்கலம் என 22 பதக்கங்களை நம் வீரர்கள் பெற்றிருந்தனர்.

2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை நம் வீரர்களால் பெற முடியாத, வெல்ல முடியாத சூழல் இருந்தது. ஆனால், தற்போது நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் வீராங்கனைகள் ஒன்பது தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்கள்.

இந்தியா மட்டும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 107 பதக்கங்களை, சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் வென்றுள்ளது. அதில் நம்முடைய வீரர்கள் 28 பதக்கங்களைக் குவித்துச் சாதித்துள்ளார்கள். இந்தியா பெற்ற பதக்கங்களில 28 சதவிகிதம் நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் பெற்று இருக்கிறார்கள்.

விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்ந்து நடைபெறுகின்ற இதுமாதிரியான நிகழ்ச்சிகளில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பங்கேற்பது நமக்கெல்லாம் பெருமையான ஒன்று.

குறிப்பாக, சாதனைகள் புரியும் நம்முடைய வீரர்களை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கௌரவித்து வருகின்றார்கள்.

சமீபத்தில், இந்திய ஹாக்கி அணியில் இடம்பெற்று சாதித்த தம்பி கார்த்திக்கிற்கு முதலமைச்சர் அவர்கள் வீடு வழங்கினார்கள்.

### முதல்வர் உதவித் தொகையாக 2.60 கோடி ரூபாய் வழங்கினார்!

2019 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற 160 விளையாட்டு வீரர்களுக்கு, கடந்த மார்ச் மாதம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூபாய் இரண்டு கோடியே 60 லட்சம் அளவிற்கு ஊக்கத்தொகை வழங்கி சிறப்பித்தார்கள்.

சர்வதேச செஸ் உலகக் கோப்பையில் சாதனை படைத்த தம்பி பிரக்யானந்தாவிற்கு 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கினார்கள். தேசிய அளவிலான சீனியர் மகளிர் கால்பந்துப் போட்டியில் தங்கம் வென்ற நம்முடைய தமிழ்நாடு வீராங்கனைகளுக்கு ரூபாய் 60 லட்சம் ஊக்கத்தொகை வழங்கினார். அதுபோல் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை பவுண்டேஷனையும் முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்து, தன்னுடைய சொந்த பணத்தில் இருந்து ஐந்து லட்சம் ரூபாய் அறக்கட்டளைக்கு அளித்தார்கள்.

அந்த அறக்கட்டளையின் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்குப் பயணம், விசா செலவு, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக நிதி அளித்தும் வருகின்றோம்.



இதுவரை அந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டு ஐந்து மாதங்களில் 90 வீரர், வீராங்கனைகளுக்கு 3 கோடியே 80 லட்சம் அளவில் தமிழ்நாடு சேம்பியன் அறக்கட்டளை மூலம் நிதி உதவி அளித்துள்ளோம்.

நாம் நிதி உதவி அளிக்கின்றோம். நிதி உதவி பெற்ற அவர்கள் பெற்று செல்லும் வீரர், வீராங்கனைகள் பதக்கங்களைப் பெற்று வந்து நம்முடைய தமிழ்நாட்டுக்கும், நம்முடைய இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கின்றார்கள். குறிப்பாக, மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

சமீபத்தில், ஜெர்மனியில் நடைபெற்ற `வேர்ல்டு டுவார்ப் கேம்'மில் பங்கேற்கச் சென்ற நம்முடைய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 8 பேருக்கு சாம்பியன் பவுண்டேஷனில் இருந்து தலா ரூ.2 லட்சம் வீதம் எட்டு பேருக்கு வழங்கினோம்.

இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்ன வென்றால், அந்த வீரர்கள் அத்தனை பேரும் பதக்கத்துடன் திரும்பி வந்து நம்மைச் சந்தித்தார்கள். அதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்றோருக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்க வருகை தந்துள்ளார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு முக்கியத்துவம்!

எப்படி கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்களோ, அதே அளவுக்கு விளையாட்டு மேம்பாட்டுத்துறைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள் என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே சான்று.

செஸ் போட்டி ஆரம்பித்து, செஸ் ஒலிம்பியாட்டில் ஆரம்பித்து, உலகக் கோப்பை ஸ்குவாஸ், ஏசியன் ஹாக்கி, வேர்ல்டு சர்பிங் லீக் எனப் பல்வேறு போட்டிகளை நடத்துவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஊக்கமளித்து வருகின்றார்கள். மாதம் ஒரு பன்னாட்டு அல்லது தேசிய அளவிலான போட்டிகளை நம்முடைய அரசு நடத்தி வருகிறது, என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு நான் கூற விரும்புகின்றேன்.

இப்போது இந்த மாதம் நாளை மறுநாள் வருகின்ற 15ம் தேதி அன்றுகூடச் சென்னையில் முதன்முறையாக ஹெச்.சி.எல் சைக்கிளத்தான் என்ற மிகப்பெரிய சைக்கிளத்தான் போட்டி நடைபெற இருக்கின்றது. அடுத்து, டிசம்பர் மாதம் ஃபார்முலா ஃபோர் போட்டிகள் சென்னையில் முதல் முறையாக தமிழ்நாட்டில் நடக்கின்றன. அதேபோல் வருகின்ற ஜனவரி மாதம் சென்னையில் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக `கேளோ இந்தியா கேம்ஸ்' எனத் தொடர்ச்சியாக விளையாட்டுப் போட்டிகளை நடத்த உள்ளோம்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு அடைய உள்ள உயரங்கள், இன்னும் அதிகம் இருக்கின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விளையாட்டுக்கு என்று ஒரு தனி அமைச்சகம் இருக்க வேண்டும் என்று எந்த லட்சியத்துக்காக இந்த அமைச்சகத்தைத் தொடங்கினாரோ, அந்த இலக்கை அடைகின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்மையெல்லாம் உற்சாகப்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாடு என்றால் சமூகநீதி என்பார்கள். தமிழ்நாடு என்றால் கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி என்பார்கள். ஆனால், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு என்றால், விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளக்குகின்ற ஒரு மாநிலம் என்ற எண்ணம் இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் ஏற்படும் வகையில் தொடர்ந்து நாம் அனைவரும் செயல்படுவோம்.

வெற்றி பெற்றவர்களுடைய அத்தனை வீரர் வீராங்கனைகளின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய விளையாட்டு வீரர்கள் இன்னும் பல சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்களைக் குவித்துத் திரும்ப, இந்த அரசும் நம்முடைய மாண்மிகு முதலமைச்சர் அவர்களும் உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இதில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் எழிலன், இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் இராமச்சந்திரன், அசோக் சிகாமணி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சிற்றரசு உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.


